# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1887/21 - 2014 නොවැම්බර් මස 05 වැනි බදාදා - 2014.11.05

*1887/21 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பில் திருத்தங்களை மேற்கொள்ளல் - திருத்த இல. 01

*2013.11.11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் 6.1, 6.2, 7.2. 4.2 மற்றும் 20.1.3 ஆம் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.*

*6.1* சேவைக்கு அனுமதிக்கப்பட்ட தரங்கள், பதவிகள் மற்றும் பதவி எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கு குறித்து தொதுக்கப்பட்ட பணிகள் :

| *தரம்* | *அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை* | பணிகள் |
|---|---|---|
| விசேட தரம் | 23 | நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் பொறியியல் விடயப் பரப்புடன் தொடர்புடைய வகையில் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கான செயற்பாட்டுடன் தொடர்புடைய திட்டமிடல் வழிகாட்டல்களையும் உபாய முறைகளையும் தயாரித்தல், சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும் கொள்கைகளை/ உபாயங்களை/ திட்டங்களை/ நிகழ்ச்சித் திட்டங்களை/ வேலைத்திட்டங்களை, உருவாக்குதல், நடை முறைப்படுத்துதல், வழிநடத்துதல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமைத்துவம். |
| தரம் I | 187 | |
| தரங்கள் I/ II மற்றும் II | 35 | நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் பொறியியல் விடயப்பரப்புடன் தொடர்புடைய வகையில் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடை வதற்கான செயற்பாட்டுடன் தொடர்புடைய பொறியியல் ரீதியான வழிகாட்டல்களையும் உபாய முறைகளையும் தயாரித்தல், சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும் கொள்கைகளை/ உபாயங்களை/ திட்டங்களை/ நிகழ்ச்சித் திட்டங்களை/ வேலைத்திட்டங்களை உருவாக்குதல், நடை முறைப்படுத்துதல், வழிநடத்துதல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நடுத்தர மட்டத்திலான முகாமைத்தவம். |
| தரங்கள் II/ III | 1086 | |



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6.2 பதவியுயர்வுக்கான இணைந்த அலுவலர்களின் எண்ணிக்கை :
(சேவைக்குரிய பதவிக்களானவை பின்னிணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன)

பின்னிணைப்பு 1 இற்கமைய தரம் I, II, மற்றும் III ஆகியவற்றிலுள்ள இணைந்த அலுவலர்களின் எண்ணிக்கை =1308, விசேட தரம் = 23

தரத்திற்குத் தரம் பதவியுயர்த்தும் நோக்கத்திற்காக சகல தரங்களும் அதாவது தரம் ஒன்று (I), தரம் இரண்டு (II), மற்றும் தரம் மூன்று (III) ஆகியன இணைந்த அலுவலர்களின் எண்ணிக்கைக்கு உரியதாக கருத்திற்கொள்ளப்படுகின்றன.

***குறிப்பு.***- பொதுச் சேவையின் தேவைப்பாடுகளுக்கிணங்க காலத்திற்குக் காலம் இவ் ஆளணி மாறுபடலாம்.

7.2.4.2 மேலே 7.2.3.3 (vi) இன் கீழ் தகைமைபெற்ற தொழில்நுட்ப அலுவலர்களிற்கான ஆக்கூடிய வயதெல்லை 45 வருடங்களாக இருத்தல் வேண்டும். ( இச்சேவைப் பிரமாணக் குறிப்பு பிரசுரிக்கப்படும் திகதி வரையில் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக மட்டுமே இத் தகைமை செல்லுபடியானதாக அமையும்).

20.1.3. சேவையின் விசேட தரத்திற்கு நியமித்தல் :

(i) இடைக்காலப் பகுதியில் சேவையின் விசேட தரத்திற்கு நியமித்தலானது இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.3 இல் குறிப்பிடப்பட்டவாறு செய்யப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ரி. எம். எல். சீ. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

11- 579

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.